பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELANADU

மலர்: 19 புரட்டாசி 17 ஷவ்வா 19 இதழ் 233
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 3-10-77

## வேலைக்குத் திரும்புவதில்லை: தமிழ் ஆசிரியர்கள் முடிவு!

### விசேட லீவு வழங்குமாறும் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

இடமாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ள ஆசிரியர்கள் சமபந்தமாகப் பதில் கிடைக்கும்வரையும் போக்குவரத்து இடத்திலும் வேலை பார்க்கும் இடத்திலும் போதிய திருப்தி ஏற்படும் வரையும் வேலைக்குத் திரும்புவதில்லை என்று நேற்று நடந்த பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு எஸ். கே. வணசிங்கா தலைமையில் நடந்த கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வேலைக்குப்போகும்வரை இடமாற்றம் கிடைக்கும்வரையும் பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

# பங்களாதேஷில் சதிமுயற்சி தோல்வி! 100பேர் மாண்டனர்!!

டாக்கா, அக். 2

**பங்களாதேஷ் இராணுவ அரசாங்கத்தைக் கவிழ்க்க இன்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சதிமுயற்சி தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

ஆயுத படையைச் சேர்ந்த "மக்கள் இராணுவம்" என அழைக்கப்படும் ஒரு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சியில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர் என்றும், சிலமணி நேரம் மட்டுமே நீடித்த இச் சதித்திட்டத்தில் பொதுமக்களும் பலியாகியுள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று அதிகாலை, பங்களாதேஷ் இராணுவத்தைச் சேர்ந்த கட்டுப்பாடற்ற ஒரு பிரிவினர் அரசாங்கத்தைத் கவிழ்க்கும் திட்டத்தில், வானொலி நிலையத்தையும், டாக்கா விமான நிலையத்தையும் கைப்பற்றும் முயற்சியில் இறங்கினர் என்றும் அப்போது விசுவாசமான படைகள் விழிப்படைந்து சதித்திட்டத்தை முளையிலேயே கிள்ளி விட்டனர் என்றும் இச்சம்பவத்தின் போது நாட்டுப்பற்று மிகுந்த சிலபடைவீரர்களும் உயிரிழந்து விட்டனர் என்றும் இன்று மாலை பங்களாதேஷ் வானொலி அறிவித்தது.

டாக்கா விமான நிலையத்திலும், வானொலி நிலையத்திலும், சிலபொது இடங்களிலும் மூண்ட சண்டையில் பொது மக்கள் உட்பட இராணுவ வீரர்கள் பலர் இறந்தனர் என்றும் இப்பொழுது நிலைமை வழமையானது என்றும் டாக்கா வானொலி அறிவித்தது.

இன்றிரவு வெளியான பி பி சி மற்றும் அவுஸ்திரேலியா வானொலி செய்திகளின் படி, இச்சதி முயற்சியை நசுக்கும் சண்டையில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர் என்று தெரியவருகிறது.

பங்களாதேஷில் இப்பொழுது நிலைமை வழமையாகிவிட்டது என்றும், ஒரு பிரிவுத் துருப்புக்களின் சதி முயற்சிகள் படுதோல்வி அடைந்துவிட்டன என்றும், இச்சதியில் ஈடுபட்டவர்கள் ஆயுதப்படையிலுள்ள ஒரு சிறு பிரிவினரான கலகக்காரர்களே என்றும் பங்களாதேஷ் இராணுவ ஆட்சித் தலைவர் அறிவித்துள்ளார்.

### வவனிக்குள துப்பாக்கிசூட்டு சம்பவம்:

## யாழ். நகரில் இருவர் கைது!

யாழ்ப்பாணம், திங்கள்

வவனிக்குளம் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் வைத்து இருவர் [illegible]பர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சி ஐ டி யை சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ரஞ்சன் சந்தையா, இவர்களைக் கைது செய்தார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களான வவனிக்குளத் [illegible]

### புனர் வாழ்வு நிதியாக

## கோண்டாவில் பஸ் டிப்போ ஊழியர் ரூ.7,500 நிதி உதவி

யாழ்ப்பாணம், திங்கள்

கோண்டாவில் டிப்போவைச் சேர்ந்த இ.போ. சபை ஊழியர்கள் கலவரங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளுக்கு 7,522 ரூபா வழங்கியுள்ளனர். இப்பணத்தை பாதிக்கப்பட்ட தமிழர் புனர் வாழ்வு சபைத்தலைவர் திரு யோ. ஜி. அரசரத்தினத்திடம் கோண்டாவில் டிப்போவில் வைத்து கையளித்தனர்.

கையளிப்பு வைபவத்தில் திரு யோ ஜி அரசரத்தினம் பேசுகையில்; நாட்டில் ஏற்பட்ட கலவரத்தின்போது கோண்டாவில் டிப்போவைச் சேர்ந்த ஊழியர்கள், தமது சேவையை திறம்பட ஆற்றியுள்ளனர் என்றும் பலவிதகஷ்டங்களின் மத்தியிலும் சேவையாற்றியதை தமிழ்

(6-ம் பக்கம்பார்க்க)

## திராவிட முன்னேற்ற கழகம் புனரமைக்கப்படுகிறது

சென்னை, அக. 2

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் புத்துணர்வு ஊட்டும் முகமாக கழகம் இப்போது முற்றாக புனரமைக்கப்படுகிறது.

புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பத் திகதி நேற்றுடன் முடிவடைந்தது. பழைய உறுப்பினர்கள் தமது உறுப்புரிமையைமீளவும் புதுப்பிப்பதற்கான விண்ணப்ப முடிவுதிகதியும் நேற்றுடன் முடிவடைந்தது.

பலலட்சம் உறுப்பினர்கள் கழகத்தில் புதிதாகச் சேர்ந்துள்ளதாக தி மு கழக தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

தி மு க தலைமை நிலையமான அறிவகத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள 50 ஊழியர்கள், வந்து குவிந்துள்ள உறுப்பினர் விண்ணப்பங்களை ஆராய்ந்து உறுப்புரிமைவழங்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

உறுப்பினர் நியமனம் பூர்த்தியடைந்தும், கழகத்தின் பொதுத்தேர்தல்கள் நடைபெறும் (கி)

### 'கொடித் தினங்களில்

## தாராள உதவி நல்குவீர்'

யாழ்ப்பாணம், திங்கள்

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்காக இம்மாதம் 14-ம், 15-ம் திகதிகளில் நடைபெற கொடித்தினத்திற்கு தாராளமாக நிதிஉதவி அளிக்குமாறு பொதுமக்களை தமிழர் புனர் வாழ்வுச்சபை கேட்டுள்ளது.

அகதிகளுக்கு மறுவாழ்வழிக்கும்வகையில் அவர்களை குடியேற்றுவதற்கான முயற்சிகளை

(6-ம் பக்கம் பார்க்க)

# 38 பிரயாணிகளுடன் விமானம் புறப்பட்டது! 'செம்படை'யினர் மத்தியகிழக்கில் இறங்கலாம்!

டாக்கா, அக். 2

டாக்கா விமானநிலையத்திலிருந்த ஜப்பானிய கடத்தல்காரர்கள், இன்றிரவு (இலங்கை நேரப்படி) 11-30க்கு பேரர் குறிப்பிடப்படாத ஒருநாட்டை நோக்கி ஜப்பானிய கடத்தல் விமானத்தில் புறப்பட்டனர்!

இவர்களுடன் ஏற்கனவே அவர்கள்கடத்திய விமானத்திலிருந்த பிரயாணிகளில் முப்பத்தெட்டுப் பேரும், விமானச்சிப்பந்திகளும், ஜப்பானிய அரசாங்கத்தினால் விடுதலை செய்யப்பட்ட ஆறு 'செம்படை' கைதிகளும் செல்வதுடன் ஜப்பானிய அரசுவழங்கிய அறுபது லட்சம் டாலர் பணமும் இருக்கிறது!

கடத்தல்காரர்கள் தங்களின் பாதுகாப்புக் கருதி, மிகுதி (38) பிரயாணிகளை விடுவிக்க மறுத்துவிட்டனர். அதேநேரத்தில்; புதிய விமானப் பணிப்பெண் ஒருவரை இந்த விமானத்தில் செல்ல அனுமதிக்குமாறு ஜப்பானிய அரசுவிடுத்த வேண்டுகோளையும் அவர்கள் நிராகரித்துவிட்டனர்.

கடத்தல்காரர்கள் இன்று காலையில் டாக்காவைவிட்டுப் புறப்பட இருந்தனர். ஆனால் பங்களாதேஷில் இன்று அதிகாலை ஏற்பட்ட திடீர்ப் புரட்சியைத் தொடர்ந்து டாக்காவிமான நிலையம் மூடப்பட்டதால், அவர்களின் விமானம் வெளியேற அனுமதிக்கப்படவில்லை.

### கடைசிச் செய்தி

விமானக் கடத்தல்காரர்கள் மத்திய கிழக்கு நாடொன்றை நோக்கிச் செல்வதாக இன்று நள்ளிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. இந்த விமானம் இறங்குவதற்கு அனுமதி வழங்குமாறு ஜப்பானிய அரசாங்கம் இன்று விடுத்த வேண்டுகோளை மத்திய கிழக்கு நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதேகோரிக்கையை முன்னர் இலங்கையும், இந்தியாவும் ஏற்றுக்கொள்ள [illegible] தன. ஜப்பானிய கடத்தல்காரர்கள் மத்திய கிழக்கு நாடொன்றிலேயே இறங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. ஈடு/9027

கொக்குவில் மேற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
1. கந்தையா இராசரத்தினமும் அவரின் மனைவி
2. கனகேஸ்வரியும்

வாதிகள்

எதிராக

வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முத்துக்குமாரு இராமலிங்கம்

பிரதிவாதி

கச்சேரியடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
1. பொன்னையா நேசதுரையும் அவரின் மனைவி
2. பூபதியும்

திருநெல்வேலியைச் சேர்ந்த
3. எஸ். கந்தையாவும் அவரின் மனைவி
4. கனகம்மாவும்

மேலதிக வாதிகள்.

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு/9027 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15-ந் திகதி (1977-11-15) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதிவாதி குறித்த வாதிகளுக்கு ரூபா 21025/-உம் மேலும் ரூபா 13000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1967-ம் ஆண்டு சித்திரை மாதம் 22-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1969-ம் ஆண்டு வைகாசி மாதம் 17-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 581/91 கொடுக்கவேண்டியிருப்பதாலும் இதில் ரூபா 14581/91 சதம் கொடுபட்டுள்ளது.

### குறித்த ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணமாவட்டம் வண்ணார்பண்ணைபிரிவு வண்ணார்பண்ணைக்கோவிற்பற்று வண்ணார்பண்ணை தெல்மேற்கிலுள்ள ''பல்லுவிளித் தோட்டம்'' என்று அழைக்கப்படும் நிலப்பரப்பு 5½ ஆனால் 1940-ம் ஆண்டு ஆடி மாதம் 6-ந்திகதி (6-7-1940) உத்தரவு பெற்ற உலாந்தா எஸ். ஜே. பிள்ளை அவர்களால் அளந்து கீறப்பட்ட 90-ம் இலக்கப் படத்தின்படி அக்காணி 5 பரப்பு 6, 1/16 குளியும் அதனைச் சேர்ந்த வீடுகளும், கிணறுகளும், வான்பயிர் செய்பயிர்களும் உள்ளன. எல்லை கிழக்கில் சபாபதியின் மனைவி கனகேஸ்வரியின் ஆதனமும், எல்லை வடக்கு சி. கே. தம்பியின் வாரிசாளர்களின் ஆதனமும் எல்லை மேற்கில் கந்தையாவின் மனைவி சிவயோகத்தின் ஆதனமும் எல்லை தெற்கில் வீதியும் உள்ளன. இவை D 279/120-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**சி. ஆ. த. வடிவேலு J. P.**
நீதிமன்ற விற்பனை
ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

''வடிவேல் உதயம்'',
காங்கேசன் துறை வீதி,
கோண்டாவில்,
20-9-1977.

7265

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம். நெடுங்குளம் றோட்
1. செல்லையா கணேசலிங்கமும் பெண்
2. சரஸ்வதியும்

வழக்காளி

இல: ஈடு/14868

எதிராக

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை, 2/6 விதானையார் ஒழுங்கை சுப்பிரமணியம் தியாகராசா

எதிராளி

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் MB/14868,ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1977-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13-ந் திகதி (13-10-77) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 4275-ம் 21-5-75 தொடக்கம் 16-10-1975 வரைக்கும் ரூபா 2250/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 454/63.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோயிற்பற்று சுண்டிக்குளி இறை ஆயக்காரன் கூடலையும், அரியாச்சிப்புலமும், வண்ணான்புலமும் நில பரப்பு இலா. 2, குளி 4 5/8 ம் வீடும், கிணறும், செய்பயிர் வான்பயிரும். எல்லை கிழக்கு றோட்டும், செல்லப்பா சபாரத்தினத்திறைதனமும். வடக்கு வஸ்தியாம்பிள்ளை பெண் மரியைப்பிள்ளையினுதனமும், மேற்கு கந்தசாமி பெண் யோகம்மாவினுதனம், தெற்கு துரையப்பா கைப்பெண் வைரப்பிள்ளையின் ஆதனம் இதடங்கலும். ஆனால் கந்தசாமி பெண் யோகம்மாவின் மேற்கெல்லைக் காணியின் தெற்கெல்லையோரமாக உள்ள பாதையுரித்துப் புறநீங்கலாக.

**க. சிவஸ்கந்தா**
நீதிமன்ற விற்பனை
ஆணையாளரும்
மதிப்பாளரும்.

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை,
12-9 77.

7285

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

1973-ம் ஆண்டின் 44-ம் இலக்க நீதிநிருவாகச் சட்டத்தின் 283ம் பிரிவின்கீழ் மரண சாதன அதிகாரப் பத்திரம் வழங்குவதற்கான

## இடைக்கால கட்டளை

### இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

யாழ்ப்பாணம், நாவலர் றோட், 35 ம் இலக்கத்தைச் சேர்ந்த மொகிதீன் சாகிப் முகம்த் மீராப்பிள்ளையின் மரண சாதனத்தின்படி

வலயம்: யாழ்ப்பாணம்
இல: 374

யாழ்ப்பாணம் நாவலர் றோட், 35-ம் இலக்கத்தைச் சேர்ந்த எம் எஸ். எம். மீராப்பிள்ளை கைம்பெண் கஜதா உம்மா

விண்ணப்பகாரர்.

1. எம். எம். மொகமட் அப்துல்காதர்,
2. எம் எம். மொகமட் கசான்மக்பூல்,
3. எம். எம். மொகமட் கசென் முபராக்,
4. எம். எம். முகம்மட் ஜலில்,
5. எம். எம். மொகமட் வலில்,
6. எம். எம். அப்துல் லட்டீப். எல்லாரும் 35, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்,
7. றசீக் பெண் மோகமட் அபீபா,
8. மீராப்பிள்ளை மகள் சித்திகபீமா,
9. சேகு மொகமட் கைம்பெண் பாத்திமாநாச்சி,
10. எம் எம். சாகுல்கமீது,
11. அப்துல்காதர் பெண் சுலேகா,
12. மீராசாகிப் பெண் சுபைத்தா,
13. சதகத்துல்லா பெண் கரீமா.
14. மீராமொகிதீன் பெண் சறீபா,
15. எம். எம். மொகமட் அப்துல்லா எல்லாரும் 35, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பிரதிவாதிகள்.

280-ம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 1977-ம் ஆண்டு ஆனி மாதம் 14-ந் திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்தில் இருக்கும் கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதெதன திருப்தியடைந்ததின் பெயரில் 1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 30 ந் திகதி அல்லது அதற்கு முன்னதாக எவராவுதல் எதிர்க்காரணம் காட்டினாலன்றி 4-3-77 இல் பிரசித்த நொத்தாரிஸ் எம். எம். சுல்தான் முகதாவில் 6088-ம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், அதன் மூலப்பிரதி இப்போது இவ்வலுவலகத்துல் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டதுமான மரணசாதனம் நிரூபிக்கப்பட்டுள்ளதென்றும், மேற்படி மரணசாதனத்தில் சொல்லியவாறு நிறைவேற்றுனராக விண்ணப்பகாரர் அதிகாரத்தைப் பெறுவதற்கு உரிமை உடையவரென்றும், அவ்வண்ணமும் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்குரிய உரிமைத் தத்துவப் பத்திரமும் பெறுவதற்கு உரிமை உடையவர் என்றும் அவ்வண்ணமே அவருக்கு வழங்கப்படுமென்று யாழ்ப்பாண நீதிநிருவாக வலயத்தில் தத்துவப்பத்திர அதிகாரி க. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் செயல்பட்டு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

1977-ம் ஆண்டு ஆனி மாதம் 14-ந் திகதி

ஒப்பம்

**கா. கணபதிப்பிள்ளை,**
தத்துவப்பத்திர அதிகாரி,
யாழ்ப்பாணம்.

மேல் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

எதிர்காரணம் காட்டும் காலம் 11-10-1977 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**கா. கணபதிப்பிள்ளை,**
ஒப்பம்
தத்துவப் பத்திர அதிகாரி.
யாழ்ப்பாணம்.

மேல் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம். 7261

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு பனம்தும்பு அடிக்கும் மெசினும் தென்னந்தும்பு மெசினும் மோட்டரும் விற்பனைக்குண்டு. தொடர்பு: நல்லையா, பனம்தும்பு தொழிற்சாலை, பெருங்காடு, புங்குடுதீவு. 7260

இலங்கை வங்கி கனிஷ்ட இலிகிதர்/உதவிக்காசாளர் பதவிகளுக்கான விண்ணப்பப் படிவம் தமிழிலும் ஆங்கிலத்திலும் தனித்தனி 50 சதம். விபர இதழ் 15 சதம். தபாலில் பெறுவதற்குத் தேவையான படிவங்களின் பெறுமதிக்கு முத்திரைகளும், 15 சத முத்திரை ஒட்டிய என்வலப்பும் அனுப்புக. ஆனந்தா புத்தகசாலை, 226, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 7244

## விற்பனைக்கு

பாவித்த 50 தகரங்கள் (பீலி) நல்ல நிலையில் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு. சிவானந்தாகபே 268, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 7287

அரியாலையில் உள்ள பூதா கோயிலுக்கு அண்மையில் சகல வரும்படியுள்ள 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு க. குமாரசாமி 30/30 அருளம்பலம் லேன், அரியாலை. 7289

8 பரப்புக்காணி ஒட்டுமடம் சந்தியில் இருந்து நூறுயார் தூரத்தில் புதுக்குடியேற்றத்துக்கு அருகாமையில் விற்பனைக்குண்டு. விரும்புவோர் நேரடியாக அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளலாம். த. இராசகுலசிங்கம் இல. 6. பிறவுண் வீதி 2-ம் ஒழுங்கை யாழ்ப்பாணம். 7290

03-09-1977 அன்று இறைவனடி சேர்ந்த

**திருமதி. இராஜேஸ்வரி நல்லையா**
(சங்கத்தானை, சாவகச்சேரி)



அவர்களின் உத்திரக் கிரியை (அந்தியேஷ்டி) இன்று (03-10-77) காலை கீரிமலையில் நடைபெற்று பின்னர் ஏனைய கிரியைகள் நீர்வேலி வடக்கில் அவரது சகோதரனின் (எஸ். தங்கராசா) இல்லத்தில் நடைபெறும். உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**எஸ். நல்லையா**
(விரிவுரையாளர் ஆசிரிய கலாசாலை அட்டாளைச் சேனை)

7291

## தேவை

பனை ஓலைச்சார்பு தேவை அரிச்சுவடி அச்சிட. தொடர்பு கொள்ளுங்கள்: மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 7252

கமிஷன் அடிப்படையில் வேலை செய்ய விரும்பும் கல்வேசர்கள் தேவை. ''அன்ரன்ஸ்'' றபர்சீல், வீட்டுப் பெயர்கள் தயாரிப்பவர்கள் 91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 7257

சகலவிதமான மோட்டார் வாகனங்களும் செலுத்தத் தெரிந்த கல்வித்தகைமை கண்ணியமுள்ள சாரதிக்கு, நேர்மையான, கண்ணியமான ஒருவரிடம் வேலை தேவை. விபரங்களுக்கு:- எஸ். பாலசிங்கம், ''இலங்கசிரி'' திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். 7266

தேவன்ஸ் சியாக்காய்பவுடர் மற்றும் தயாரிப்புக்களை தயார் செய்வதற்கு, பெண் பிள்ளைகளும் விற்பனை செய்வதற்கு ஆண்களும் தேவை. தேவன்ஸ் இன்டஸ்றீஸ், 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 7263

கொழும்பிலுள்ள ஒரு பிரபல வர்த்தக கூட்டுத்தாபன நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திலும், வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலுள்ள கிளைநிறுவனங்களிலும் கடமையாற்ற பில்கிளாக். டைப்பிஸ்ற். சாமான் கட்டுபவர்கள், சமையல்காரர் ஆகியோர் தேவை. முன்னர் வேலைபார்த்தஇடம், தகைமைகள் போன்ற விபரங்களுடன் 05-10-77க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 7274, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 7274

## வாடகைக்கு

கிளிநொச்சியில் வாடகைக்கு வியாபாரஸ்தலம் எவ்விதமான வியாபாரத்துக்கும் தகுந்ததும், முக்கியமான இடத்தில்அமைந்ததுமாகும். தேவையானோர் கடிதமூலம் அல்லது நேரில் பேசிக்கொள்ளவும். வ. பகீரதன், 20/9, வைரவர்கோவில் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 7250

### பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (மட்டுப்படுத்தப்பட்டது) பருத்தித்துறை

## கேள்விப் பத்திரம்

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தில் சுமார் 5000 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கு உண்டு. கேள்விப் பத்திரத்தை வைப்புப் பணமாக ரூபா 50/-ஐயும், கேள்விப் பத்திரத்திற்கு ரூபா 2/-ஐயும் கட்டி, இக்கந்தோர் நேரத்தில் பொது முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரம் பெறும் கடைசித் திகதி 14-10-77. கேள்விப் பத்திரம் 14-10-77-க்குப் பிந்தாமல் 'பொதுமுகாமையாளர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரம் அனுப்பப்படும் தபாலுறையின் மேற்பக்க இடது மூலையில் 'வெற்றுச் சாக்குக்கான கேள்விப் பத்திரம்' என எழுதப்படல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**
பரு. ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.

30-9-77.
7278

# பூட்டோ மீதான விசாரணையின் பின்பே பொதுத்தேர்தல்

## இராணுவ அதிகாரி அறிவிப்பு

இஸ்லாமாபாத், செப். 2 பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜுனுப் சுல்பிகார் அலி பூட்டோமீதான விசாரணைகள் முடிவுற்ற பின்னரே பொதுத் தேர்தல் நடைபெறும் என்று பாகிஸ்தான் இராணுவ சட்ட அதிகாரி ஜெனரல் ஸியாவுல் ஹக் அறிவித்துள்ளார்.

ஜுனுப் பூட்டோ மீதான விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் பொதுத் தேர்தலை நடத்துவது உகந்ததல்ல என்றும் தெரிவித்த ஜெனரல் ஹக், தற்போது நாட்டில் உருவாகியுள்ள குழப்ப நிலை நீங்கிய பின்னரே பொதுத் தேர்தல் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளையில் ஏற்கனவே அறிவித்திருந்தபடி இம்மாதம் 8 ம் திகதி பொதுத் தேர்தலை நடத்தாவிட்டால் நாட்டில் மேலும் குழப்பநிலை அதிகரிக்கும் என்று பாகிஸ்தான் மக்கள் கட்சி பதில் தலைவி திருமதி பூட்டோ தெரிவித்துள்ளார். (இ)

## குழாய் நீர் விநியோகம் சீரானது

யாழ்ப்பாணம்,திங்கள் அண்மையில் நெடுந் தீவு குழாய்நீர் விநியோகத்தில் ஏற்பட்ட தட்டுப்பாட்டின் போது நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரும் கிராம சபை விசேட ஆணையாளருமான திரு. செ. அமிர்தலிங்கம் எடுத்த துரித நடவடிக்கையால் நீர் விநியோகம் சீர்படுத்தப்பட்டுள்ளது

நெடுந்தீவுக்கிராம சபையினால் நடாத்தப்பெறும் இந்தக் குழாய் நீர்விநியோகத்தில் பிரதான குழாயில் ஏற்பட்ட தடை காரணமாக நீர்விநியோகம் தடைப்படலாயிற்று. இதுபற்றி நெடுந்தீவு கிராமமுன்னேற்றச் சங்கமும் பலஅரசாங்க நிறுவனங்களும் செய்த புகாரையடுத்து விசேஷ ஆணையாளரான திரு. சொ. அமிர்தலிங்கம் பொதுவேலைப்பகுதி உத்தியோகத்தரையும் ஏனைய ஊழியர்களையும் அழைத்து பழுதுபார்க்கும் வேலையில் ஈடுபடுத்தியதால் நீர்த்தடையின் காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் நீர்விநியோகம் மீண்டும் சீர்பெறத் தொடங்கியுள்ளது. இதனால் கிராம முன்னேற்றச்சங்கமும் அரசாங்க நிறுவனங்களும் ஆணையாளரது சேவையைப் பாராட்டின. (கா-மு)

# "நல்லூரின் தொன்மை அழியாமல் காக்கின்றனர்"

## ஆய்வுக் குழு மாணவருக்கு அருட் திரு. சர்வானந்தன் பாராட்டு

அரியாலை, ஞாயிறு 'தமிழரசர்களின் தலைநகராக விளங்கிய நல்லூரின் பழமையையும் கலாச்சாரத்தையும் பற்றி ஆராய்வதிலும், அவற்றை எதிர்காலச் சந்ததியினர் அறிந்து தெரிந்துகொள்ளவும், இவைகளை அழிந்து போகாமல் பாதுகாக்கவும் பரி. யோவான் கல்லூரி தொல்பொருள் ஆய்வுக்குழு மாணவர்கள் ஈடுபாடு கொண்டுழைத்துவருவதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இம் மாணவர் குழு இவ்விஷயத்தில் காட்டிவரும் ஆர்வமும் முயற்சியும் போற்றுதற்குரியதாகும். சரித்திரகாலந்தொட்டு இன்றுவரை நல்லூர் மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்றுவருகிறது. இன்று யாழ்ப்பாணப் பகுதியிலே மேலைத் தேயக் கிறிஸ்தவர்களால் முதன் முதல் அமைக்கப்பட்டதும் நல்லூரிலே இன்று மிகவும் புனிதஸ்தலமாக விளங்குவதுமான பரிசுத்த யாக்கோபு ஆலயத்தின் சரித்திரத்தைக் கொண்ட இப்பெயர்ப்பலகையை நல்லூரிலே இன்று திறந்துவைப்பதில் பெருமை அடைகிறேன்.'

இவ்வாறு பரி. யோவான் கல்லூரி தொல்பொருள் ஆய்வுக்குழு மாணவர்களால் ஆக்கப்பட்ட பரி யாக்கோபு ஆலய பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்துவைத்த அருட்திரு. சர்வானந்தன் அடிகள் பேசுகையில் குறிப்பிட்டார்.

செல்வன் ஜே. கே. ஞானப்பிரகாசத்தால் சர்வானந்தம் அடிகள் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டார்.

இவ் வைபவத்தில் பரி. யோவான் கல்லூரி அதிபர் திரு. ஸி. ஈ. ஆனந்தராசா பேசுகையில், "நல்லூரின் பழம்பெரும் கலாச்சாரத்தையும், அதன் பழமையையும் ஆராய்வதிலும் அதனைப் பேணுவதிலும் எமது கல்லூரி மாணவர்கள் பெரிதும் ஆர்வம் காட்டிவருகின்றனர். இவர்கள் சமீபகாலமாக நல்லூரின் பழமை மிக்க பொருட்களைக் கொண்டு நூதனசாலையொன்றை அமைப்பதிலும், முக்கிய சரித்திர சம்பந்தமான இடங்களில் பெயர்ப் பலகைகளை நாட்டுவதிலும், நாட்டுக் கூத்துகளை ஆராய்ந்து புதிய உத்திகளுடன் அவற்றைத் தயாரிப்பதிலும் அவர்கள் காட்டிவரும் ஆர்வம் போற்றுதற்குரியதாகும். இவைகளின் மூலம் எமது எதிர்கால மக்கள் நல்லூரையும் அதனுடைய பண்டைப் பெருமைகளையும் அறிய வாய்ப்புகள் ஏற்படும் என்று கூறினார்.

தொல் பொருள் ஆய்வுக் குழுப் பொறுப்பாசிரியர் திரு. என். மயில்வாகனம் பேசுகையில், இம் மாணவர் குழு நடாத்தும் ஆய்வுகளின்மூலம் நல்லூரின் வரலாறும் அதனது முக்கியத்துவமும் எதிர்காலச் சந்ததியினர் அறியக்கூடியதாக அமையும் என்று கூறினார்.

செல்வன் எம். மகேந்திரராசா நன்றி தெரிவித்துப் பேசினார். மாணவர்கள் உட்படப் பெருந்தொகையான பொதுமக்கள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். (அ)

# "உள்ளங்கள் ஆலயமானால் பிறஆலயங்கள் அவசியமில்லை"

யாழ்ப்பாணம், திங்கள் "நம் உள்ளங்கள் அனைத்தும் ஆலயங்களானால் உண்மையில் ஆலயம் என்று ஒன்று அவசியமில்லை. ஆனால் அப்படியான உள்ளங்கள் நமக்கு இல்லாமையால் இறைவனை அணுக உள்ளத்தைப் புனிதமாக்க மனிதன் மனிதனாக வாழஆலயம் அமைத்து அதன் மூலம் இறைவனோடு பேசுகிறோம். இவ்வாறு அருட்திரு ஏ.எவ். எக்ஸ் ஜெயசேகரம் அடிகளார் கூறினார்.

பலாலி ஆசிரிய கலாசாலையின் கத்தோலிக்க மறைக் கல்வியைக் கவனித்து வந்த அருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் புலமைப்பரிசில் பெற்று உயர் கல்விக்காக ரோமாபுரி சென்றுள்ளதால் அவரது இடத்திற்கு நியமிக்கப்பட்ட தம்மை வரவேற்குமுகமாக மேற்படி கலாசாலை கத்தோலிக்க மன்றத்தால் நடத்தப்பட்டவிழாவில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

திரு.ஏ.சி.எஸ். இம்மானுவல் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

கலாசாலை அதிபர் திரு. வி. கந்தசாமியும் விழாவில் பேசினார்.

மன்றச்செயலாளர் திரு அ.ம. ஜெயரத்தினம் நன்றியுரை நிகழ்த்தினர். (உ)

# "'பட்ஜட்' மக்களுக்கு நிவாரணமளிக்கும்"

பதுளை,ஞாயிறு "சிலநிவாரணங்களை எதிர்பார்த்து மக்கள் ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களித்து ஆட்சிக்கு கொண்டுவந்தனர் ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததிலும் பார்க்க கூடிய நிவாரணத்தை பெறப் போகின்றார்கள். நவம்பரில் சமர்ப்பிக்கப்படவிருக்கும். வரவு செலவுதிட்டம் மூலம் இந்த நிவாரணம் கிடைக்கும்".

பதுளையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய பதுளை எம். பி. திரு. வின்சன்ட் டயஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது நாட்டில் கலவரம் தோன்றியிராவிட்டால் அரசாங்கம் அதிகமானபிரச்னைகளை தீர்த்துவைத்திருக்கும் அரசாங்கம் வாழ்க்கைச் செலவை குறைக்க நடவடிக்கை எடுத்தது ஆனால் கலவரம் காரணமாக மீண்டும் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது

கலவரத்தில் பங்கெடுத்தவர்களைத்தான் மக்கள் குறைசொல்ல வேண்டுமே தவிர அரசாங்கத்தையல்ல.

எப்படியிருந்த போதிலும் மக்கள் வரவு செலவுத்திட்டத்தின்பின் நிவாரணம் பெறுவார்கள். (க)



## 3—10—77 திங்கள்

(செய்திகள்: காலை 6-30 பகல் 12-45, மாலை 6—00 இரவு 9-00)

காலை 6-00 மங்கள இசை, 6-05 சைவநற்சிந்தனை - இ. வடிவேலு, 6-10 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6—15 பாமாலை, 6-50 இசைக்கோவை, 7-30 உலகச் செய்திகள், 7—35 பாட்டு பொன். ஸ்ரீ வாமதேவன், 8-05 இரு வயலின், 8-15 முஸ்லிம் நிகழ்ச்சி.

மாலை 6-20 விளையாட்டுத் துறைச் செய்திகள், 6—30 வயலின்-சிவயோகி.சபாரத்தினம், 7-00 கிராமசஞ்சிகை தொகுப்பு: இரா. பத்மநாதன், 7-30 உலகச் செய்திகள், 7—35 வாத்திய விருந்து, 7—45 கண்டதும் கேட்டதும் செய்திச்சுருள், 8—00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9—30 பேச்சு, 9—45 நாகசுரம் வி. குமாரசாமி, 10—30 உங்கள் விருப்பம் திரைப்பாடல்கள். (செ)

## இ.போ.ச. ஊழியருக்கு கோல உடை

கொழும்பு,ஞாயிறு இ. போ. ச. ஊழியர் சகலருக்கும் கோல உடைவழங்கப்படவிருப்பதாகஇ. போ.ச. தலைவர் திரு. எர்வின் ஜெயசூரியா தெரிவித்தார்.

இ. போ. ச. ஸிகிதர்கள் தவிர்ந்த மற்றும் சகல ஊழியர்களுக்கும் வருடம் 5 யார் துணி கோலஉடைக்காக வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (க)

## நியமனம்

கொழும்பு, ஞாயிறு எயர்சிலோன் நிறுவனத்தில் கடந்த ஏழாண்டுகளாகநடைபெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணை செய்வதற்கு திரு. ஏ. ஸி. டி. சூசா தலைமையில் மூவர் கொண்ட ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

### இந்திய மத்திய வங்கி கவர்னர் நியமனம்:

# இந்திராவின் உத்தரவையே சி. எஸ். நிறைவேற்றினாராம்

## ஜா கமிஷன் முன் சாட்சியம்

புதுடில்லி, அச். 2 'திருமதி காந்தியின் ஆட்சிக் காலத்தில் இந்திய மத்திய வங்கியின் கவர்னராக நியமிக்கப்பட்டவர், திருமதி காந்தியின் ஆலோசனையின் பேரிலேயே நியமிக்கப்பட்டார். என்னைப்பொறுத்தவரை அந்த நியமனத்தில் எனக்கு விருப்பம் இருக்கவில்லை.'

இவ்வாறு முன்னாள் இந்திய நிதி அமைச்சர் திரு. ஸி. சுப்பிரமணியம் 'ஜா' கமிஷன் முன்னிலையில் தெரிவித்தார்.

கவர்னர் பதவிக்கு வேறு ஒருவரையே நியமிப்பதற்கு நான் எண்ணியிருந்தேன். ஆனால் திருமதி காந்தியின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியிருந்ததனால் அது முடியவில்லை என்றும் திரு. சுப்பிரமணியம் கூறினார்.

நேற்றைய விசாரணையில் கமிஷனர் திரு. ஜா மந்திரிசபையின் இரகசியங்களை வெளியிடுவது குறித்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

"மந்திரிசபையின் இரகசியங்களை வெளியிடுவது சட்டவிரோதமானதுதான். ஆனால் இவ்வாறான விசாரணைக் கமிஷன் முன்னிலையில் மந்திரிசபை நடவடிக்கைகள் குறித்த இரகசியங்களை வெளியிடுவது சட்டத்துக்கு விரோதமானதல்ல.' (இ)

## 2 மூடைசீனி திருட்டு

யாழ்ப்பாணம்,திங்கள் தென்மராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் களஞ்சியத்தில் 2 மூடை சீனி திருடப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இப்புகாரைத் தொடர்ந்து பதில் காவலாளி தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இப்புகார் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது. (க)

# நாட்டின் பிரச்னைகளை கைக்குண்டுகள் தீர்க்காது

## கல்வி அமைச்சர் கூறுகிறார்

கண்டி, ஞாயிறு 'நாட்டின்பிரச்னைகளை கைக்குண்டுகள், வாள்கள், கிறிஸ் கத்திகள்மூலம் தீர்க்க முடியாதென்பதை நாங்களும், இந் நாட்டு இளைஞர்களும் உணர்ந்து கொள்ளவேண்டும்.'

தெலுக்கெல்ல ராஜமகா விகாரையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

கல்வி அமைச்சர் மேலும் கூறியதாவது;- இன்னும் 20 வருட காலத்தில் இன்று கைக்குண்டு பாவிப்பவர்களின் பிள்ளைகள், அவர்களுக்கு எதிராகவும் கைக்குண்டைப் பாவிப்பார்கள் என்பதை எச்சரிக்கிறேன்.

விலைமதிப்பற்ற தேசிய சொத்தான நாட்டின் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு சகல ஆசிரியர் பெற்றோர்

(4-ம்பக்கம் பார்க்க)

## கொழும்பு ஆயர் யார்?

அரியாலை, திங். கொழும்பு அதியட்சாதினத்திற்கான புதிய ஆயரைத் தெரிவு செய்யும் கூட்டம் கொழும்பில் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது.

தற்பொழுது ஆயராக இருக்கும் அதி வணக்கத்துக்குரிய பிதா சிறில் அபயநாயக்கா ஆண்டகை இளைப்பாறுவதினால் இப்புதிய தெரிவு நடைபெறவிருக்கிறது. (அ)

ஆசிரியருக்கு கடிதம்:

# அன்புள்ள சிங்கள —சகோதரனுக்கு!

உங்கள் இடத்தில் இப்போது அமைதி நிலவுவதாகவும் மீண்டும் அங்கு வருமாறும் நீங்கள் எழுதியகடிதம்கிடைத்தது. உண்மையில் உங்கள் போல் பல நல்ல சிங்களச் சகோதரர்களை நான் பார்த்திருக்கிறேன். பழகியிருக்கிறேன், ஏன் உங்கள் வீட்டுமுன் அறையில் நீங்களும் நானும் ஒன்றாக மனம் விட்டுக் கலந்து பேசியதையெல்லாம் நான் நினைக்கும்போது இந்த இரு இனங்களுக்கிடையிலும் இப்படி ஒரு வெறிப்போராட்டம் ஏன் நடக்க வேண்டும் என்ற கவலையுடன் சிந்திக்கிறேன்.

உங்கள் கடிதம் கண்டவுடன் நான் குடுகேசுடன் ஓடோடி உங்கள் ஊருக்கு வந்திருப்பேன். ஆனால் உங்கள் இனத்தில் உள்ள வெறிகொண்டவர்கள் நடத்திய வேட்டைதான் எனது கால்களுக்கு எனது ஊரில் இருக்கும்படி கட்டளையிட்டுக் கொண்டிருக்கின்றன.

சில நாட்கள் உருண்டோடி விட்டாலும் அந்தக் கிழிந்த நினைவுகள் பல என் நெஞ்சில் குத்திக் கொண்டிருக்கின்றன. ஏன் வீடுகள் எரிக்கப்படுவது இன்னமும் இலங்கையைவிட்டு விடுபட்டதாக இல்லையே.

பல கொடூர விஷயங்கள் பத்திரிகைகளில் படித்துப் படித்து கண்கள் காய்ந்து மரத்துப்போய்விட்டன. உங்கள் பகுதிப் பத்திரிகைகளில் இவை ஏதும் வந்ததா? ஏதேனும் வாசித்துப் பார்த்தீர்களா?

ஒரு இனம் வாழவேண்டுமென்றால் மற்ற இனம் அ[illegible] தொழிக்கப்பட வேண்[illegible]மென்ற 'நியதி' அல்லது வி[illegible] இருந்திருந்தால் இன்று உலகில் இத்தனை இனங்களும் இருந்திருக்குமா?

இலங்கையில் இந்த வருடம் செப்டம்பர் மாதத்தில் தீ மூட்டிவிடப்பட்ட இனக்கலவரம் உண்மையில் உங்களைப் போன்ற கௌரவமான படித்த, பண்பாளர்களால் துவக்கி வைக்கப்பட்டதல்ல என்பதை நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம். ஆனால் நெருப்புக்கு அதிக பாகுபாடு கிடையாது. அது எல்லாவற்றையும் சமமாக எரித்துவிடும். யார் கொழுத்தினாலும் அது எரியும் இதைப்போல் உங்கள் இனத்தவர் சிலரால் (கடையர்கள் என்று நீங்கள் மனதில் எரிந்து கொண்டு கூறுவீர்கள்) மூட்டப்பட்ட தீ இன்று எத்தனையோ அப்பாவி உயிர்களை, பிஞ்சுக் குழந்தைகளை எரித்துப் பொசுக்கி சாம்பலாகிவிட்டன. கோடானுகோடி எண்ணங்களுடன் மனிதன் வாழ ஆரம்பிக்கிறான். ஆனால் இவ்வித கொடுமைக் கொலைகளுக்கு அவன் பலியாக்கப்படும் போது அவனது நினைவுகள் எப்படியெல்லாம் சிதைபட்டுப்போய்விடுகின்றன தெரியுமா? வீடுகள் எரிக்கப்பட்டன. புனிதமாகப் பேணப்பட்ட கற்பு சூறையாடப்பட்டது. கற்பிணிகள்கூட விரட்டி அடிக்கப்பட்டார்கள். கப்பல்களில் வந்தவர்கள் கதை இன்னும் தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருக்கிறது. துயர அலைகள் மோதிக் கொண்டே இருக்கின்றன. ஓயவில்லை. எப்படி ஓய்வது? திரும்பும் இடங்களிலெல்லாம் இப்போது எங்கள் ஊரில் அகதிகளின் அவலக்குரல்கள். குழம்பிய மனோநிலையில் ஏக்கத்தால் இடிவிழுந்து கிடக்கின்றார்கள். துடிக்கும் நெஞ்சங்களின் துயரக்குரல்கள் கோயில் மணி ஓசையைவிட மேலாகக் கேட்கிறது.

கோயில் என்னும்பொழுது புத்தரின் தர்மோபதேசங்கள் காதில் கேட்கின்றன. நீங்கள் ஒரு அசல் பௌத்தர் என்பது எனக்குத் தெரியும். கொடுமைகளைச் சகிக்காமல் தான் சின்னவனான சித்தார்த்தன் உயர்ந்த புத்தபிரானானான். இதற்கு மிஞ்சியும் ஏதோ சொல்ல நினைக்கிறேன். ஆனால் எப்படிச் சொல்ல என்ற வழிதான எனக்குத் தெரியவில்லை.

நேற்றுத்தான் எனது மகனின் 8ம் வகுப்பு சமூகக்கல்விப்புத்தகத்தைத் தட்டிப் பார்த்தேன். அதில் ஒரு தமிழரான சேர் பொன்னம்பலம் இராமநாதன் என்பவரின் சேவைபற்றிக் குறிப்பிட்டிருந்தது. அதைத் தாங்களும் வாசிக்க வேண்டும் என்பதற்காக இங்கு தருகிறேன்.

'1915-ம் ஆண்டு நிகழ்ந்த இனக்கலவரத்தின்போது சிங்களமக்கள் அனுபவித்த இன்னல்களை எடுத்தியம்பி, அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பரிகாரம் தேடி நீதியை நிலைநிறுத்துவதற்குப் போராடியவர்களுள் ஒருவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களாவர். இதன்நிமித்தம் குடியேற்ற நாட்டுக் காரியதரிசியைச் சந்தித்து உண்மைகளைச் சமர்ப்பிப்பதற்காக இலங்கையிலிருந்து இங்கிலாந்துக்குச்சென்ற பிரதிநிதிகளுள் இவரும் ஒருவராவர்.

இப்பொழுதுகூட இந்த நாட்டில் தமிழர் ஒருவர் நீதி அமைச்சராக இருப்பது குறித்து உண்மையில் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

எங்கள் பகுதிகளில் தாலிக்கொடிகளுக்கு திருமாங்கல்யம் என்றொரு பெயரும் உண்டு. அதற்கு அத்தனை மதிப்பு மரியாதை. ஆனால் இதெல்லாம் அங்குள்ள சில காடையர்களின் கால்களிலும் மிதிபட்டனவாம். இது மட்டுமல்ல எங்கள் கடவுள்களின் திருவுருவச் சிலைகளும் பல அவதாரங்களாக உருவெடுத்தனவாம். சிலைகளை அழிப்பதால் கடவுளை அழித்துவிடமுடியுமா? நீங்களே கூறுங்கள்?

நாங்கள் மிகவும் நாகரிகமான யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று நான் அடிக்கடி சிந்தித்துப் பெருமைப்படுவதுகூட உண்டு. இப்போது இவைபற்றியெல்லாம் பார்க்கும்போது சிரிக்கத்தான் தோன்றுகிறது.

ஐ. நா. கட்டடம் ஒன்று இன்னும் அசையாமல் இருந்து கொண்டிருப்பதும் மனித உரிமை. மனித உரிமை என்று அடிக்கடி பேசப்பட்டு வருவதும் ஏதோ ஒரு ஆறுதல் அளிப்பதாகத் தானிருக்கிறது.

உங்கள் காணிகளை உங்கள் நன்மைக்காக நீங்கள் பயன் பெற அளந்த நிலஅளவையாளர்கள், பாலங்களைப் போட்ட என்ஜினியர்கள், தேயிலைக் கொழுந்து பறித்த தொழிலாளர்கள், படிப்பித்த ஆசிரியர்கள், நோய்க்கு மருந்து அளித்த டாக்டர்கள் எல்லோரும் இங்கு பாகுபாடின்றி வீதியில் நிற்கிறார்கள். விரட்டியடிக்கப்பட்டதால் இந்தப் பாகுபாடற்ற ஒரு சோஷலிச சமுதாயம் உருவாகியிருக்கிறது.

அங்கு உங்களூரில்தான் இப்படிக் கொடுமைகள் என்று நினைக்காதீர்கள். இங்கும் அவ்வளவு பிழையில்லை. போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட ஒரு பெரிய சந்தை [illegible]சுக்கப்பட்டுள்ளது. ஆட்களைப் பொலிசாரும் தேடிவருகின்றனர்.

இங்கு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களின் தீர்ப்பின்போது மதிப்புக்குரிய நீதிபதி திரு சே. வி. நவரத்தினம் என்பவர் அளித்துள்ள தீர்ப்பின் வாசகத்தை இங்கு தருகிறேன் தயவுசெய்து அதையும் வாசியுங்கள்.

'நியாயத்தை ஆராய்கின்ற மனிதரின் குணம் எங்களை விட்டு அகன்றுபோய்விட்டது. இன்று அவசரம் காரணமாக உண்மைகள் பலிபீடத்தில் தியாகம் செய்யப்படுகின்றன. குற்றம் இழைப்பது இன்றைய ஒழுக்கமாகிவிட்டது. குற்றவாளிகளைத் தடுக்க வேண்டிய அமைப்பு இன்று பரிகாசத்திற்குள்ளாகியிருக்கிறது.

மனிதர்கள் மீண்டும் நாகரிகமான தூயவாழ்வே வாழவேண்டுமானால் மனிதர்களில் புனரமைப்புச் செய்து மீண்டும் நல்ல குணங்களை விதைக்கும் பணியை ஏற்றுக் கொள்ளுமாறு மதஸ்தாபனங்களை நான் மன்றாட்டமாக வேண்டிக் கொள்கின்றேன்.'

ஒரு இனத்தை மற்ற இனம் விழுங்குவதால் இன ஐக்கியம் ஒருபோதும் ஏற்படாது. ஒரு இனத்தின் மனக்குமுறல்களை மற்ற இனம் விளங்கிக் கொள்வதால்தான் அப்படியொரு ஐக்கியம் ஏற்படுமென்று நான் நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? பூக்காடாக இருக்க வேண்டிய இலங்கை சில வெறிபிடித்த காடையர்களால் சாக்காடாக்கப்பட்டு விட்டது. இதுகுறித்து உங்களைப்போல் நானும் நெஞ்சம் வெதும்பிக் கலங்குகிறேன். கண்ணீர் வடிக்கிறேன்.

- க. கணேசலிங்கம்

## வன்முறைக்கும் தமக்கும் தொடர்பில்லையாம்

### கம்யூனிஸ்ட் (பீக்கிங்) கட்சி மறுப்பு

யாழ்ப்பாணம், திங்கள் அண்மையில் நாட்டில் நடைபெற்ற இனக்கலவரத்தின் போது வடபகுதியில் நடைபெற்ற வன்செயல்களுக்கும் கம்யூனிஸ்ட் (பீக்கிங் சார்பு) கட்சிக்கும் தொடர்பு உண்டென்று வெளிவந்த செய்தியை கம்யூனிஸ்ட் (பீக்கிங் சார்பு) கட்சியின் வட பிரதேசக் கமிட்டி முற்றாக மறுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி கட்சியின் வட பிரதேசக் கமிட்டியின் சார்பில் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் பத்திரிகைக்கு விடுத்துள்ள செய்தியில் கூறியிருப்பதாவது:-

'எமது கட்சி ஒரு தேசியக் கட்சியாகும். சிங்களத் தொழிலாளர்கள் விவசாயிகளை பெரும்பான்மையாகக் கொண்ட எமது கட்சி, வட பகுதியில் சிங்கள மக்களுக்கும் அவர்களது உடைமைகளுக்கும் சேதம் விளைவித்ததென்று கூறுவது வேடிக்கை தரும் அறிக்கையாக உள்ளது. வட பகுதியில் இனக்கலவரத்தை மூட்டியது யார் என்பதை பொலிசாரால் அறிய முடியாவிட்டாலும் பொது மக்கள் நன்கு அறிவர். இனக்கலவரத்தால் சிங்கள மக்கள் பாதிக்கப்படாது பாதுகாத்ததில் எமது கட்சி எத்தகைய பாத்திரம் வகித்தது என்பதை வட பகுதியிலுள்ள தமிழ்-சிங்கள மக்கள் நன்கு அறிவர்.

'உண்மை நிலை இப்படி இருக்க வெளிவந்த செய்தி உண்மை நிலைக்குப் புறம்பானதுமட்டுமன்றி, பொது மக்கள் மத்தியில் எமது கட்சிக்கு மாசு கற்பிக்க எடுத்த முயற்சியுமாகும்.

'எமது கட்சியும் வாலிபர்களும் . கொலை, கொள்ளை, தீவைப்பு, இனக்கலவரம் போன்ற மக்களுக்கு விரோதமான எந்த ஒரு சிறு நடவடிக்கையிலும் ஈடுபட்டதில்லை என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவர்.' (இ)

### நாட்டின்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் ஒத்துழைப்பு அவசியமாகும். நமது எதிர்காலம், இளம் சந்ததியினரில் தான் தங்கியுள்ளது. தேசப்பற்றுள்ள பிரஜைகளாக அவர்களை நாம் உருவாக்கவேண்டும். இதற்கு மகாசங்கம், மற்றும் சமயஸ்தாபனங்களின் ஒத்துழைப்பு அவசியம்.' (க)

# வைரவ மூர்த்தத்தின் தத்துவங்களும்சிறப்புகளும்

— ஐ. கைலாசநாதக்குருக்கள்

வைரவப் பெருமானது உண்மைத்தத்துவம் என்ன வென்பதை சைவர்கள் அறிந்து கொள்வது அவசியமாகும். உலகின் முழுமுதற் கடவுளாகிய சிவனையும், கலியுகக் கந்தனாகிய முருகனது மூர்த்தத்தத்துவத்தையும் அறிந்து கொண்டுள்ள [illegible] சைவர்கள் வைரவ சுவாமியின் மூர்த்தத்தின் தத்துவத்தை அறிந்து கொள்ளவேண்டும். சிவனுக்கும், வைரவ சுவாமிக்கும் எத்தகைய வேறுபாடுகளும் இல்லை என்பதற்கு வைரவ சுவாமியின் தோற்றமே நமக்கெடுத்துக்காட்டாக அமைகிறது.

வைரவர் பற்றிய தோத்திரங்களிலும், நாம் சொல்லுகின்ற தியானங்களிலும் அவரது தோற்றம் எவ்வகையில் அமைந்துள்ளன எனப்பார்க்கும் போது சிவனுக்கும் வைரவருக்கும் எந்தவித்தியாசங்களும் இல்லை என்பது புலனாகும்.

வைரவ சுவாமியின் சடாபாரமானது இரத்தமாக ஜொலிக்கின்ற ஜுவாலையாகக் காட்சியளிக்கின்றது. இதைப் போலவே உலகில் அழிக்கும் தொழிலைச் செய்கின்ற சிருஷ்டி கர்த்தாவாகத்சிவபெருமானது சடாமுடியும் தீச்சுவாலையாகவே தோற்றமளிக்கின்றது. எனவேதான் இவரும் முழுமுதற் கடவுளைப் போன்று அழித்தல் தொழிலையே செய்கிறார். வைரவசுவாமியின் தலையில் தீக்கொழுந்தாக ஜுவாலிக்கின்ற ஜடாபாரத்தைப் பார்க்கின்ற ஆன்மாக்கள் பயங்கொள்ளாது அக்கினிக்கு அஞ்சாது இருக்க வேண்டுமே என்பதற்காக சந்திரனையும் தன் சடாபாரத்தில் தரித்திருக்கின்றார் அவர் பயிர்பட்சிகளின் வளர்ச்சிக்கும், உலகின் குளிர்ச்சிக்கும் காரணமாக சந்திரன் திகழ்கின்றார். அது மட்டுமன்றி அவரது உடல் இரத்த நிறமானதே ஜோதியமானது. சிற்றறிவுடையார்களாகிய நமது பாவங்களையும், குற்றங்களையும் நீங்குவதற்கு அழிப்பதற்குமாகவே அக்கினி வடிவாகவுள்ளார் அவர் அவரது திருக்கரத்திலே மூன்று தலைகளையுடைய சூலம் வைத்திருக்கிறார். இந்த மூன்று கிளைகளாகக் காணப்படுகின்ற சூலமானதுமுச்சக்திகளான இச்சா சக்தி, ஞானசக்தி, கிரியா சக்தியை வெளிப்படுத்துகின்றது. இன்னுமொரு கரத்திலே பிரம கபாலத்தை வைத்திருக்கின்றார். ஆன்மாக்களாகிய நாம் கர்வங் கொண்டால் அதனை அடக்கி நம்மை ஆட்கொள்ளவே பிரமகபாலத்தை வைத்திருக்கிறார். ஆன்மாவின் ஆணவத்தை அடக்க பாசக் கயிற்றையும் வைத்திருக்கிறார். ஆன்மாக்கள் ஆணவமலத்தினால் சென்றால் அந்த வழியில் நின்றுதிருத்த வேண்டும் என்பதற்காகவேதான் கரத்தினில் பாசக் கயிற்றினை வைத்திருக்கிறார் இன்னுமொருகரத்தினில் உடுக்கையை வைத்திருப்பதை நாம் காண்கின்றோம். இந்த உடுக்கையானது ஒரு சுழலில் இருபக்கங்களிலும் தட்டி ஓசை எழுப்புவதையும் நாம் அறிவோம் எனவே இந்த உடுக்கைமூலம் நாதத்தை உண்டுபண்ணி உலக தோற்றத்தை நமக்கறிவுறுத்தவே உடுக்கையைக் கரத்தில் வைத்திருக்கின்றார். இந்த உடுக்கையிலே சிறப்பான கதையொன்றும் உண்டு. இறைவன் உடுக்கையில் நாதத்தை உண்டுபண்ணி பிமனிய முனிவருக்குக் சமஸ்கிருதத்தில் இருந்து இலக்கணத்தைச் சொல்லிக் கொடுத்தார் என்றும் வடமொழியில் திடமொழியை அகத்தியருக்குத் தமிழ் இலக்கணம் சொல்லிக் கொடுத்தார். என்றும் சொல்லப்படுகிறது.

உலகிலுள்ள ஆன்மாக்கள் அவை தாம்தாம் செய்த பாவபுண்ணியங்களின்படி அவற்றிற்கு மோட்சத்தையும் நரகத்தையும் அனுபவிக்க விட்டுப் பார்த்திருக்கிறார் வைரவப் பெருமான் அவரது நிர்வாணக் கோலம் அவர் விருப்பு, வெறுப்புக்களுக்காட்படாது ஆசாபாசங்களால் கட்டுப்படாத நடுநிலையினைக் காட்டுவதாக அமைகிறது. அவரது வாகனமான நாயினது நான்கு வேதங்களையும் நாயகத்தன் வசப்படுத்தித் தன்கீழ் வைத்திருக்கிறார்.

உலகில் உள்ள தியசக்திகளை எல்லாம் அடக்கி வைத்திருக்கின்ற வைரவசுவாமி இந்த உலகினையும் காவல் செய்கிறார். பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவம் ஆகிய ஐந்து மூர்த்திகளும் ஐந்து தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தலாகிய தொழில்களைச் செய்கின்றபோது வைரவப் பெருமான் இவ்வைந்து தொழில்களையும் தாமே தனித்து நின்று நடத்துகின்றார். இதனால் இவருக்கும் சிவனுக்கும் பேதங்கிடையாது. இவரை நாம் நாளாந்தம் தரிசித்தால் நாம்செய்த செய்கின்ற, பாவங்கள் தொலையும்.

வைரவப் பெருமானுக்குரிய செவ்வாயன்றும், பரணி நட்சத்திரத்தன்றும் நாம் வைரவர் கோவிலுக்குச் சென்று வழிபடுவது நம் வாழ்வின் ஏற்றத்திற்கும் எழுச்சிக்கும் காலாகும்.

(யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை நல்ல தண்ணீர்க் கிணற்றடி ஸ்ரீ ஞானவைரவ சுவாமி கோவில் ஸ்ரீ முருகப் பெருமானின் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவன்று நயினை நாகபூசணி தேவஸ்தான பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் ஸ்ரீ வைரவ மூர்த்தியின் சிறப்புகளையும், தத்துவங்களையும் குறித்து நிகழ்த்திய உரையின் சுருக்கம்) (கா-அ)

நாகம்மாள்
(சுன்னாகம்)
தினசரி 6 45 10-00
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
பூம்புகார்

புலோலி இனிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 2-30, 7-00
வல்லவன்
ஒருவன்

RIO (Jaffna) Daily 10-30, a.m. 4-45, 7-15 p. m.
PETER CUSHING - BERNARD LEE
in
FURY
AT SMUGGLER'S BAY
(கடத்தல்காரர் பக்கம் குமுறல்)
Eastman Colour Panascope

மனோஹரா (யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
தினசரி மு.ப. 10-30 பி.ப. 2-30 6-30, 9-45
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30 9-45
ஃ சிவாஜி (மூன்று வேடங்கள்)
ஃ ஜெயலலிதா
தெய்வ மகன் (புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — ஜெயபிரபா அசோகன்
துணிவே துணை

லிடோ (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-30 போன்: 7693
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
பணம் பந்தியிலே
அடுத்த வெளியீடு நீதிக்கு தலை வணங்கு

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-00 p. m. only
'SEXY SUSAN KNOWSHOW'
(Adults only Color)

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-00 9-30 போன்: 7180
எம். ஜி. ஆர் — ஜெயலலிதா
நடித்த
கன்னித்தாய்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
அன்னக்கிளி

ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்


# அரசியல் அமைப்பு திருத்தம்

# விவாதத்தில் த. கூட்டணி

# கலந்து கொள்ளாது?

யாழ்ப்பாணம், திங்கள்

அரசியல் அமைப்புத் திருத்த விவாதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பீக்கள் கலந்துகொள்ளமாட்டார்களென்றும் வாக்களிப்பின்போது நடுநிலைமை வகிப்பார்களென்றும் இவை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் தேசிய அரசுப் பேரவையில் நிலையை விளக்கி அறிக்கையொன்றை வெளியிடுவாரென்றும் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணி நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் இவ்விஷயங்கள் ஆராயப்பட்டபோது மேற்கண்டவாறு ஒரு முடிவை எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் தென்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் கிழக்குமாகாண உறுப்பினர்கள் கலந்துகொள்ளாததினால் முடிவு எடுக்கப்படவில்லை. 1972ம் ஆண்டு தமிழர் கூட்டணித் தலைவர்களால் நிராகரிக்கப்பட்ட அரசியலமைப்புக்கு கொண்டுவரப்படும் திருத்தத்தில் கலந்துகொள்ள வேண்டிய அவசியம் தமிழர் கூட்டணிக்கு இல்லையென கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டதாகத் தெரியவருகிறது.

அரசியலமைப்பை அரசு பூரணமாக மாற்றியமைக்கும் பட்சத்தில்மட்டுமே அச்செயற்பாட்டில் கூட்டணி அக்கறை காட்டவேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இக்கருத்துக்களைப் பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவருகிறது.

## மாவட்ட அமைச்சர்கள்

மாவட்ட அமைச்சர்கள் எத்தகைய அதிகாரவரம்பைக் கொண்டிருப்பார்கள் என்று இன்னும் தெரிவிக்கப்படாததினால் இப்பிரச்சினை குறித்து உடனடியாக அலசி ஆராய வேண்டிய அவசியமில்லையென கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டதாகத் தெரியவருகிறது.

தமிழ் மக்களுக்கு நீண்டகால நோக்கில் பயன்கிடைக்க கூடிய வகையில், மாவட்ட அமைச்சர்களின் அதிகாரங்கள் வகுக்கப்பட்டால் மட்டுமே அதுபற்றி கூட்டணி ஆராயும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

இன்று கொழும்பில் திரு. எம். சிவசிதம்பரம் இல்லத்தில் நடைபெறவிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி நடவடிக்கை குழுவின், கிழக்கு மாகாண உறுப்பினர்களின் கூட்டத்தில் இக்கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படும்.

இன்றுமாலை கொழும்பில் நடைபெறவிருக்கும் தமிழர் விடுதலை கூட்டணி பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் இவ் விஷயங்கள் தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படும். (க)

## பொலிஸ் நிலையத்திலே திருட்டு

யாழ்ப்பாணம், திங்

யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகரின் காரியாலயத்தல் கடமைபுரியும் ஒருவரது சைக்கிள் ஒன்று யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து இனந்தெரியாத நபர்களால் களவாடப்பட்டுள்ளது. இது பற்றி யாழ். பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். (கெ-இ)

## உலகத் திருச்சபைக்கிளை நிதிஉதவி

அரியாலை, திங்கள்

தென்னிலங்கையிலிருந்து வன்செயல்களால் பாதிக்கப்பட்டுக் கொழும்புத்துறை அகதிகள் முகாமில் இதுவரை தங்கியிருந்த 22 குடும்பங்ள் வன்னேரிப் பகுதியில் குடியேற்றப்படவிருக்கிறார்கள்.

புதிய இடத்தில் இவர்கள் போய் தமது புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு உலகத்திருச்சபை கொழும்புக் கிளையினால் இவர்களுக்கென யாழ்ப்பாணம் ஆர்ச் டீக்கன் ஜே. ஜே. ஞானப்பிரகாசரிடம் அனுப்பப்பட்ட மூவாயிரம் ரூபா நேற்று முன்தினம் இவர்களுக்குப் பங்கிட்டு வழங்கப்பட்டது. (அ)

## பாஷையூர் அன்ரனிஸ் வெற்றி

அரியாலை, ஞாயிறு

யாழ். பரியோவான் கல்லூரி 3-ம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் பாஷையூர் சென். அன்ரனிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டக் போட்டியில் 3-1 கோல்களால் சென் அன்ரனிஸ் கோஷ்டி வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு. யே. அம்பலசிலன் மத்தியஸ்தம் வகித்தார். (அ)

'இலங்கையில்

## தொழிலாளர் அரசு மலர சீன ஆட்சி முறையே வழி

அரியாலை, திங்கள்

'அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகளின் அரசியல் சித்தாந்தம் எமக்கு விமோசனம் அளிக்கமாட்டாதென்பதை இன்று மக்கள் உணர ஆரம்பித்துவிட்டனர். அடிமைத் தளையை அறுத்தெறிந்த தலைவர் மாவோவின் திருஷ்டியில் உருவாகிய சீன தேசத்து அரசியல் முறையே நம் நாட்டில் உள்ள தொழிலாளர் - விவசாயிகளைக் கொண்ட ஆட்சி ஏற்பட வழி செய்யும். இன்று சீனாவின் வியக்கத்தக்க முன்னேற்றத்தைக்கண்டு உலகமே வியக்கிறது.'

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ட்றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற தேசிய சீனாவின் 28வது தேசியதினக் கொண்டாட்டத்தில் பேசிய திரு. கே. செந்தில்வேல் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. முத்தையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. செந்தில் வேல் தொடர்ந்து பேசுகையில், கடந்த தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் நாடுகள் தனித்தனி பிரிந்து செல்வதை மாவோ விரும்பினார் என்று பலர் மேடைக்கு மேடை பேசினார்கள். இவர்களுக்கு மாவோவின் சிந்தனை குறித்து எதுவும் தெரியாது. ஆனால் இவர்களுக்கு எம். ஜி. ஆர். சிந்தனையும் கருணாநிதி சிந்தனையும் மட்டுமே தெரியும். வர்க்கப் பிரச்சினை தீர்ந்தால் மட்டுமே இனப் பிரச்சினை தீரும்என்றமாவோவின் சிந்தனையை இவர்களுக்கு எடுத்துக் கூறவிரும்புகிறேன்''.

யாழ். வளாகப் பேராசிரியர் கலாநிதி க. இந்திரபாலா பேசுகையில் ''ஏகாதிபத்திய ஆட்சிக்குள் கிடந்த நாம் இன்னும் மேலை நாடுகளையே நோக்குகிறோம்' அதனால் தான் நாம் முன்னேற முடியாத நிலையிலிருக்கிறோம். இன்று உலகத்திற்கே விடிவெள்ளியாகத்திகழும் சீன தேசத்தை நாம் பின்பற்றினால் நமது நாடு நிச்சயமாக முன்னேறும்'' என்று கூறினர்.

சட்டத்தரணி தேவராஜா திரு. செல்வன் பத்மநாதன், திரு. கே. எஸ். கனகரத்தினம் ஆகியோரும் பேசினர் மாவோவின் இலட்சியப்பாதை என்றதிரை படம் காண்பிக்கப்பட்டது.


விற்பனையாகின்றன

1977 டிசம்பரில் நடைபெறவிருக்கும் N. G. C. E. பரீட்சைக்கான பயிற்சிநூல்கள்.

1. பைந்தமிழ்ப் பயிற்சி தொகுப்பு தரம் 9: பகுதி I. II விளக்கக்குறிப்புகளுடன்.
2. புடவையும் உடைஅமைத்தலும். தரம் 9: வினாத்தாள்களும் விடைகளும்.
3. ஆங்கிலம், மொடல் கொஷ்யன் பேப்பர்கள் தரம் 9: பகுதி I. II விடைகளுடன்.
4. சுகாதாரவியலும் உடற்கல்வியும். தரம் 9: பயிற்சி வினாக்களும் விடைகளும்.
5. இந்துசமயம். தரம் 9: வினாத்தாள்களும் விடைகளும்.
6. நாட்டின் வளங்கள் தரம் 9: பயிற்சி வினாத்தாள்களும் விடைகளும்

வெளியீடு:

ஞானசுரபி புத்தகக்கம்பனி
217, மின்சாரநிலையம் வீதி, யாழ்ப்பாணம்.

7267

**மணிவாக்கு**

அரசியலிலும் சமூக சேவையிலும் ஈடுபடுபவர்களுக்குத் தெய்வ நம்பிக்கை மிக அவசியம்

— மகாத்மா காந்தி

ஈழநாடு

The Eelanaadu

# அமைதிப் பிரதேசம்

இந்து மகா சமுத்திரப் பகுதியை அமைதிப்பிரதேசமாகப் பிரகடனப்படுத்தவேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாகவே எழுந்து வந்துள்ளது.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்திவந்தது இலங்கை. இலங்கையின் பிரதமராகப் பதவி வகித்த உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்ற திருமதி சிறிமா பண்டாரநாயகா உலக அரங்காகிய ஐ நா. சபைக்குச் சென்று இந்து மகா சமுத்திரப் பகுதியை அமைதிப்பிரதேசமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டினார்.

எந்த வல்லரசுகளும் இப்பிரதேசத்துக்குள் தளம் அமைக்கக்கூடாதென்பதை இப்பிரதேசத்திலுள்ள நாடுகள் பலவும் ஏற்றுக்கொண்டன.

இந்து மகா சமுத்திரப் பகுதியை அமைதிப்பிரதேசமாகப் பேணவேண்டுமென்ற தீர்மானமும் ஐக்கியநாடுகள்சபையில் நிறைவேற்றப்பட்டது.

திருமதி சிறிமா பண்டாரநாயகா தலைமையிலான ஆட்சி மாறிவிட்டது. இதன்பின் ஆட்சிக்கு வந்துள்ள திரு ஜே. ஆர். தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கமும் அமைதிப்பிரதேசத் தீர்மானத்தை ஆதரிக்கின்றது.

இலங்கை அரசின் சார்பில் இம்முறை ஐ. நா. கூட்டத் தொடரில் கலந்துகொண்ட இலங்கைத் தூதுக்குழுவின் தலைவரும் இலங்கை வெளி விவகார அமைச்சருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் இந்து மகாசமுத்திர அமைதிப்பிரதேசம் பற்றி ஐ. நா. தீர்மானம் நிறைவேற்றி ஆறு ஆண்டுகளாகியும் அத்தீர்மானம் செயல்படுத்தப்படவில்லையென்பதைச் சரியாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்து மகா சமுத்திரப் பகுதியில் வல்லரசுகளுக்கு எப்போதுமே ஒரு 'கண்' இருந்துவருகிறதென்பதை எல்லோருமே ஒப்புக்கொள்கின்றனர்.

வல்லரசுகள் எதுவும் இந்த நாளில் ஆக்கிரமிப்புச் செய்வது சுலபமல்ல.

அப்படியானால் இப்பிரதேசத்திலுள்ள நாடுகள் தான் வல்லரசுகள் தங்கள் முகாம்களை அமைத்துக் கொள்வதற்கு அனுமதி வளிக்கவேண்டும்.

வல்லரசுகளின் உதவியை நாடுவதும் இந்த நாடுகள் தான்.

எந்த ஒரு நாட்டுக்கும் பொருளாதார உதவியோ, இராணுவ உதவியோ ஐ.நா மூலம் தான் அளிக்கவேண்டுமென்ற ஒரு கட்டுப்பாடும் நியதியும் இருந்தால் வல்லரசுகள் எந்த நாட்டுடனும் நேரடியாக உதவி என்ற பெயரில் தமக்கு வாய்ப்புத் தேடிக் கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்காது.

இதே சமயம் இந்து மகா சமுத்திரப் பிரதேசத்திலுள்ள நாடுகளில் சிறுபான்மையினர் பிரச்சினையோ வேறு பிரச்சினைகளோ இல்லாமல் அந்தந்த நாடுகள் அமைதியைப் பாதுகாத்துக் கொண்டால் அந்நிய வல்லரசுகள் இப்பிரதேசத்தில் வாலாட்டுவதற்கு இடமிருக்காது இந்துமகாசமுத்திரப் பிரதேசத்தையும் அமைதிப் பிரதேசமாகப் பாதுகாக்கவும் வழி பிறக்கும்.

# 'சகல இனத்தவருமுள்ள பாதுகாப்புக் குழு'

## ஹாடி தமிழ் மாணவர் தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள்

கல்லூரி அதிபரைத்தலைவராகக்கொண்டதும் விரிவுரையாளர்களையும் சகல மாணவர்களையும் உள்ளடக்கியதுமான ஒரு பாதுகாப்புக்குழு அமைக்கப்படவேண்டும் என்று ஹாடி வளாகத் தமிழ் மாணவர்கள் யாழ் மத்திய கல்லூரியில்கூடி முடிவெடுத்துள்ளனர்.

இவர்கள், அண்மையில் நடைபெற்ற கலவரத்தினால் பாதிக்கப்பட்டு வடபகுதிக்குத் திரும்பியவர்கள்.

மாணவர்கள் நிறைவேற்றியுள்ள தீர்மானங்களில் சகல மாணவர்களின் வகுப்புக்களும் ஒரேதினத்தில் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் சகலரையும் கொண்ட பாதுகாப்புக்குழு ஒன்று அமைக்கப்படும் பட்சத்தில், இக்குழு நாட்டின் எப்பகுதியிலேனும் இனக்கலவரம் தோன்றுமாயின் 24 மணி நேரத்தினுள் சிறுபான்மைஇன மாணவர்கள் அனைவரையும் ஓரிடத்தில் ஒன்று சேர்த்து அவர்கள் கேட்கும் பாதுகாப்பை அளிப்பதுடன் 8 மணிநேரத்திற்குள் அவர்களின் சொந்தப் பிரதேசங்களுக்கு அவர்கள் விரும்பும் பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் அவர்கள் விரும்பும் மார்க்கமாக அனுப்பப்படவேண்டும் என்றும் மூன்றும் வருட செய்முறை பயிற்சி நெறிக்கு தமிழ் மாணவர்கள் தாம் விரும்பும் பிரதேசங்களில் மேற்படிபயிற்சியைப்பெற அனுமதியளிக்கப்படவேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இக்கோரிக்கை மனுவின் பிரதிகள் வளாகத்தலைவருக்கும் பிரதமருக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சென்ற மாதம் 17-ந் திகதி வகுப்புக்குச் சமூகம் தரும்படி வளாகம் அறிவித்தும் தமிழ் மாணவர் எவரும் இதுவரை திரும்பவில்லை. (கு)

# வடபகுதியில் நடக்கும் அக்டோபர் புரட்சிதினம்

யாழ்ப்பாணம், திங்கள்

அக்டோபர் புரட்சியின் 60வது நினைவுதினம் வடபிரதேசத்தின் பல பகுதிகளிலும் கொண்டாடப்படவிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற இதுசம்பந்தமான ஆலோசனைக்கூட்டத்தில் இது பற்றித் தீர்மானிக்கப்பட்டது. மானிப்பாய், காங்கேசன்துறை வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலும் மற்றும் பல இடங்களிலும் அக்டோபர் புரட்சியின் 60வது நினைவுதினத்தைக் கொண்டாடுவதென்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாகக் குழுவொன்றும் நிறுவப்பட்டது குழுவில் இடம்பெற்றுள்ளோர் விபரம் வருமாறு:

போஷகர்கள்: எதிர்க்கட்சித் தலைவர்! திரு. அ. அமிர்தலிங்கம், கம்யூனிஸ்கட்சி வடபிரதேசக் காரியதரிசி: திரு. அ. வைத்திலிங்கம், தலைவர்: திரு. வி. தர்மலிங்கம் எம் பி, உப தலைவர்கள்: திருவாளர்கள் வெ. யோகேஸ்வரன் எம் பி, எஸ். வி. சுப்பிரமணியம், ஆ. தியாகராசா, இணைச் செயலாளர்கள்: திரு. இ. சிவகணேசன், திரு கே வி சிவசுப்பிரமணியம். பொருளாளர்: திரு. கோ. குலசேகரம், அமைப்பாளர்: திரு வ. பொன்னம்பலம்.

இவர்களோடு இன்னும் ஆறு பேர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

### டிப்ளோமா தபால் பயிற்சி

# விண்ணப்பமுடிவு திகதியை பின்போடக் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

தேசிய கல்வி முகாமை டிப்ளோமா தபால் பயிற்சி நெறிக்கான முடிவு திகதி கடந்த 30ந் திகதியாக அரசு வர்த்தமானியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இன்றுவரை பலருக்கு விண்ணப்ப படிவங்கள், விபரக்கோவை அனுப்பப்படாமையினால், பெரும்பாலன மாணவர்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

வர்த்தமானி அறிவித்தலுக்கமைய விண்ணப்பதாரிகள் கல்வியமைச்சின் தொழில் நுட்பப் பிரிவுக்கு 2 ருபா 50 சதம் அனுப்பியிருந்தனர். இவர்களில் பெரும்பாலனவருக்கு விண்ணப்ப திகதி முடிந்தும் விண்ணப்ப படிவம் கிடைக்காதது குறித்து தேசிய நலன் புரிச் சங்கச் செயலாளர் திரு. செ. செல்வகுமார் மேலிடத்திற்குச் சுட்டிக்காட்டியுள்ளார் விண்ணப்ப முடிவு திகதியைப் பின்போடும்மாறும், விண்ணப்பப்படிவங்களையும், விபரக்கூற்றையும் உடன் அனுப்பிவைக்குமாறும் கல்வியமைச்சின் செயலாளருக்கும் தொழில் நுட்பக் கல்வி நிலைய இயக்குநருக்கும் அவசரத் தந்திகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவை குறித்து மானிப்பாய்த்தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கமும் நடவடிக்கை எடுத்துள்ளார் (இக-அ)

## கொடித்....

(1ம்பக்கத்தொடர்ச்சி)

நடைமுறைப்படுத்த அரசாங்கத்தினதும் தேசிய பேரவை உறுப்பினர்களினதும் • ஒத்துழைப்புடன் சபை செயல்பட்டு வருகிறது.

வடபகுதியில் பல்வேறுதுறைகளில் கைத்தொழில்களை ஆரம்பித்து அகதிகளுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளிக்கப்படவிருக்கிறது. இத்திட்டங்களை நிறைவேற்றுவதில் அரசின் அங்கீகாரம்பெற்ற பாதிக்கப்பட்ட புனர்வாழ்வுச் சபையும், திரு கே சி நித்தியானந்தா தலைமையில் இயங்கும் புனர்வாழ்வுச் சபையும் ஒருங்கிணைக்கப்பட்டு செயல்பட்டுவருகின்றன. (கெ)

## புனர்வாழ்வு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் மறக்கமாட்டார்கள் என்றும் கூறினர்

இந்தவைபவத்தில் கோப்பாய் தேசிய பேரவை உறுப்பினர் திரு எஸ் கதிரவேலுப்பிள்ளை, யாழ்ப்பாண தேசிய பேரவை உறுப்பினர் திரு வெ யோகேஸ்வரன், யாழ் டியபோவைச் சேர்ந்த, அதிகாரி, திரு எஸ் தியாகராசா ஆகியோரும் கலந்து கொண்டனர் . (கெ)

## வவனிக்குள....

(1ம் பக்கத் தொடர்ச்சி

தைச் சேர்ந்த எரோனிஸ் நெடுந்தீவைச்சேர்ந்த சுந்தரரத்தினம் ஆகியோர் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளனர் வவனிக்குளம் சம்பவம் தொடர்பாக, பொலிசார் தொடர்ந்து விசாரணைசெய்து வருகின்றனர். (க)

# வேலைக்குத் திரும்புவ—

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யர்களுக்கு விசேட லீவு வழங்கவேண்டும் என்று கல்வி அமைச்சரை கோருவதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

### தமிழ் பகுதிகளே பாதுகாப்பானது

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கோப்பாய் எம் பி திரு எஸ் கதிரவேலுப்பிள்ளை கூறியதாவது;

''எவ்வளவுக்கெவ்வளவு தமிழ்ப் பிராந்தியங்களில் தமிழர் வாழக்கூடியதாக இருக்குமோ அவ்வளவுக்கவ்வளவு பாதுகாப்பு இருக்குமே யொழிய சிங்களமக்கள் மத்தியில் வாழ்வதானல் கஷ்டமான எதிர்காலத்தை நோக்க வேண்டியிருக்கும்

''சில இடங்களில் சிங்கள நண்பர்களும், இராணுவத்தினரும், பொலிசாரும் பாதுகாப்புக் கொடுத்திருக்கலாம் அப்படிபபட்டவர்கள் மற்றவர்கள் நிலை என்ன என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்

''திரும்பிப் போய் சேவை செய்வது குறித்து ஒவ்வொருவரும் கவனமாக யோசித்து செய்யவேண்டிய விஷயமாகும்''

கல்வி அமைச்சின் செயலாளரைச் சந்தித்துப பேச்சுவார்த்தை நடத்தினும் எந்த ஆசிரியர் சங்கமும் திரட்டி அனுபபும் இடமாற்ற விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று அவர் கூறினர்

### இடமாற்ற விண்ணப்பம்

''இதற்கென தயாரிக்கப்பட்ட விசேடமான விண்ணபப பத்திரத்திலேயே இடமாற்றத்திற்கு விண்ணபிக்க வேண்டும் நேரடியாக பதிவுத்தபாலில் கல்வி அமைச்சின் செயலாளருக்கு இடமாற்ற விண்ணபபம் அனுபபவேண்டும் அதன் பிரதி தமிழர் ஆசிரியர் சங்கப பொதுச்செயலாளருக்கு அனுப்பவேண்டும தமிழர் ஆசிரியர் சங்கப பொதுச்செயலாளர் திரு ந. பாலசுப்ரமணியம் பேசுகையில் கூறியதாவது:

''19-ந் திகதி வேலைக்குப போகாத ஆசிரியர்கள் 'லீவு' கோரி விண்ணப்பித்தது போல் 3-ந் திகதியும் 'லீவு' விண்ணபபம் அனுபபவேண்டும் பாடசாலை அதிபருக்கோ கல்வி அதிபதிக்கோ காரணங்களைக் காட்டி 'லீவு'க்கு விண்ணபபிக்கவேண்டும் (க)

# நாடும் நடப்பும்

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசாமிகோயில், சிவன் கோயில், ஞானசம்பந்தர் ஆதீனத்துக்கு அருகில் ஒரு கல்யாணமண்டபம் அமைக்கப் பெற்றுள்ளது.

முன்னுள் யாழ்-நகர மேயர் அமரர் அல்பிரட் தங்கராசா துரையப்பா திட்டமிட்டு இந்தக்கல்யாண மண்டபத்தை அமைத்தார்.

அடிக்கடி தமிழ்நாடு சென்று வந்த அவர் அங்குள்ளது போன்ற பல திட்டங்களை உருவாக்க நினைத்தார் இலவற்றை செயல்படுத்தினர்.

கல்யாணமண்டபம் பூர்த்தி செய்யப்படுவதற்கு முன்னரே அவர் பலியாகிவிட்டார்.

அவர் உயிருடனிருந்தால் ஒருவேளை அது என்றும் கலியாணக் கோலமாகக் காட்சி தந்துகொண்டிருக்குமோ தெரியவில்லை.

இந்த மண்டபம் திறந்து வைக்கப்பட்டும் அது பெரும்பாலும் சும்மா கிடக்கிறது.

இந்த நிலையைப் பார்த்து யாழ்.மாநகரசபையின் விசேஷ ஆணையாளர் திரு சு. சிவஞானம் கல்யாணமண்டபத்தின் வாடகை விகிதத்தை வெகுவாகக் குறைத்திருக்கிறார்

முதல் நான்குமணி நேரத்துக்கும் முப்பதுரூபாவும் மேலதிக ஒவ்வொருமணி நேரத்துக்கும் பத்து ரூபாயும் கட்டணமாக வசூலிப்பதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்.

கல்யாண மண்டபத்தைக் கட்டிவைத்துச் சும்மா இருப்பதில் யாருக்கும் பயனில்லை. இதுசம்பந்தமாக பொதுமக்கள் யோசனைகள் தெரிவித்தால் அவற்றில் சிறந்த யோசனைகளை விசேஷ ஆணையாளர் நிச்சயம் செயல்படுத்துவார்.

0 0 0

ஈழத்தின் பிரபல சங்கீத வித்துவான்களில் ஒருவரான திரு பரம்தில்லைராஜா பிரிட்டனில் தங்கியிருந்தபின் சென்ற வாரம் யாழ்ப்பாணம் திரும்பியிருக்கிறார்

பிரிட்டனில், எட்டு இடங்களில் அவர் இன்னிசைவிருந்தளித்திருக்கிறார்

கலைஞர்களுக்கு அந்த நாட்டு மக்களும் அரசும் கொடுக்கும் கௌரவத்தையும் ஆதரவையும் வெகுவாகப்புகழ்கின்றார்

கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு என்பது ஔவை மொழி கலைஞர்களுக்கும் கற்றோருக்கும் இப்போது வெளிநாடு சென்றால்தான் சிறப்பு என்று புது மொழி போலும்.

0 0 0

கடந்த பதின்மூன்று ஆண்டுகளாகத் தனிமனிதசக்தியுடன் வெளிவந்து 'மல்லிகை' இம்முறை பதின்மூன்றுவது ஆண்டுச் சிறப்புமலராக வெளிவந்துள்ளது

அதிகபக்கங்களுடன் சிறந்த எழுத்தாளர்களின் படைப்புக்களுடன் இந்த மலர் மலர்ந்திருக்கிறது

நாட்டில் கலவரமும் பிரச்னைகளும் தலைதூக்கியிருந்த இச்சமயத்தில் மல்லிகையை மணம்வீசும் சிறப்பு மலராக மலரவைத்த அன்பர் டொமினிக் ஜீவாவின் சாதனை பாராட்டுக்குரியது.

- ஊர்சுற்றி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெண்கோவில் மேலவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 3-ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri lanka